



# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## மானியக் கோரிக்கை எண் : 49

அறிவிப்புகள்

2023 – 2024

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மானியக் கோரிக்கை எண் : 49

## அறிவிப்புகள்
## 2023 - 2024

**உதயநிதி ஸ்டாலின்**
இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

1. புதியதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களில் ரூ.9000.00 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கங்களை உள்ளடக்கிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் நிறுவப்படும்.

பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஆரோக்கியமான, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதையும், சமூகத்தில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கலாச்சாரத்தை வளர்ப்பதையும் அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

தனிநபர், குழு விளையாட்டு, தனிப்பட்ட பயிற்சி மற்றும் போட்டி நிகழ்வுகளில் பங்கேற்க ஏதுவாக புதியதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களில் ரூ.9000.00 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கங்களை உள்ளடக்கிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் படிப்படியாக நிறுவப்படும்.

2. 2023 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பொன்விழாவை சிறப்பித்திடும் வகையில் அனைத்து ஊராட்சிகளுக்கும் "டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்" கீழ் ரூ.4200.00 இலட்சம் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

நமது கிராமப்புற இளைஞர்கள், விளையாட்டின் மீது அதீத ஆர்வம் உடையவர்கள் ஆவர். இவர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் பல்வேறு விளையாட்டுகளை விளையாடி மகிழ்வர். இது தனிமனித வளர்ச்சிக்கும் சமூக ஒற்றுமைக்கும் வழிவகுக்கும். ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்களிடம் தேவையான விளையாட்டு உபகரணங்கள் இருப்பதில்லை.

ஊரக இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்திய முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பொன்விழா ஆண்டான 2023-ல் மாணவர்கள் மற்றும்



இளைஞர்களின் நேரம் மற்றும் சக்தியினை ஒருமுகப்படுத்தி அவர்களை விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்தும் நோக்கில் கிராமப்புற இளைஞர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் "டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்" கீழ் அனைத்து ஊராட்சிகளுக்கும் ரூ.4200.00 இலட்சம் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

**3. சென்னையில் உள்ள ஐந்து முக்கிய விளையாட்டரங்கங்களில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.2500.00 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.**

ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல்குள வளாகம் ஆகிய ஐந்து முக்கியமான விளையாட்டரங்கங்கள் சென்னையில் உள்ளன. இந்த வசதிகள் விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்களால் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நமது விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காகவும், பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் அதிநவீன வசதிகளை உருவாக்குவதற்கு விரிவான மறுசீரமைப்பு தேவைப்படுகிறது.

எனவே, சென்னையிலுள்ள ஐந்து முக்கிய விளையாட்டரங்கங்கள் ரூ.2500.00 இலட்சம் செலவில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.



**4. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு எலைட் (ELITE) திட்டம் மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் மிம்ஸ் (MIMS) ஆகிய திட்டங்களின் கீழ் வழங்கப்படும் சிறப்பு உதவித் தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும்.**

ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறன் கொண்ட தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு தேவை அடிப்படையிலான நிதியுதவி அளிப்பதற்காக "தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை" (ELITE) திட்டத்தினை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றிற்கு வழங்கும் நிதியுதவி ரூ.25.00 இலட்சத்திலிருந்து ரூ.30.00 இலட்சமாகவும், தற்போதுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 12-லிருந்து 25 ஆகவும் உயர்த்தப்படும்.

பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்வதை ஊக்குவிக்கும் (MIMS) திட்டத்தின்

கீழ் நபர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றிற்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.12.00 இலட்சமாகவும், தற்போதுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 50–லிருந்து 75 ஆகவும் உயர்த்தப்படும்.

இத்திட்டங்களை செயல்படுத்திட ரூ.1650.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**5. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.1000.00 இலட்சம் செலவில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 27 விளையாட்டு விடுதிகள், 4 சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள் மற்றும் 6 முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் இயங்கி வருகின்றன. மேற்கண்ட விளையாட்டு விடுதிகள் மற்றும் மையங்களில் வளரும் திறனாளர்களுக்கு தங்கும் வசதிகளுடன் கூடிய விளையாட்டு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

எதிர் காலங்களில் பதக்கம் வெல்லக்கூடிய வாய்ப்புள்ளவர்களுக்கு சிறந்த பயிற்சி அனுபவத்தை அளித்திடும் பொருட்டு ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு விடுதிகள் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.

**6. சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நவீன LED மின் விளக்கு வசதிகள் ரூ.990.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.**

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் பல திறந்தவெளி விளையாட்டு மற்றும் பயிற்சி வசதிகள் சர்வதேச தரத்தில் அமையப் பெற்ற நவீன விளையாட்டரங்கமாகும்.

இந்த விளையாட்டரங்கத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான தடகளப் போட்டிகள் மற்றும் ISL கால்பந்துப் போட்டிகள், பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்த விளையாட்டரங்கில் தற்போதுள்ள விளையாட்டு மற்றும் பார்வை அனுபவங்களை அதிகரிக்க, DMX கட்டுப்பாட்டு அமைப்புடன் கூடிய நவீன LED விளக்குகள் ரூ.990.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.



**7. கோவில்பட்டியில் மாணவர்களுக்கான ஹாக்கி முதன்மை நிலை விளையாட்டு மையம் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் ஹாக்கி விளையாட்டு மிகவும் பிரபலமானதாகும். இங்கு தற்போது இயங்கிவரும் ஹாக்கி சிறப்பு விளையாட்டு விடுதியில் 30 மாணவர்கள் உள்ளனர். இவ்விடுதிக்கு பல சிறந்த தேசிய மற்றும் சர்வதேச வீரர்களை உருவாக்கிய பெருமையும் உண்டு.

கோவில்பட்டி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஹாக்கியின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கவும், நவீன பயிற்சி வசதிகளை உருவாக்கவும் கோவில்பட்டியில் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் ஹாக்கி முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்கப்படும்.

**8. மாநிலத்தில் பாரா-விளையாட்டுகளை (Para-Sports) ஊக்குவிக்கும் வகையில் நாட்டிலேயே முதன்முறையாக ரூ.600.00 இலட்சம் செலவில் 6 மாவட்ட விளையாட்டரங்கங்களில் பிரத்யேக பாரா-விளையாட்டு மைதானங்கள் (Para-Sports Arena) உருவாக்கப்படும்.**

சமூக நீதி நமது அரசாங்கத்தின் அடித்தளமாக அமைகிறது. அனைவருக்கும் சம வாய்ப்புகளை உருவாக்குவது மாண்புமிகு முதலமைச்சரின் உன்னதமான தொலைநோக்குப் பார்வையாகும். நமது பாரா-விளையாட்டு (Para-Sports) வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல பதக்கங்களை வென்று சாதனை படைத்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்து வருகின்றனர்.

பாரா-விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் நாட்டிலேயே முதன்முறையாக ரூ.600.00 இலட்சம் செலவில் 6 மாவட்ட விளையாட்டரங்கங்களில் பிரத்யேக பாரா-விளையாட்டு மைதானங்கள் (Para-Sports Arena) உருவாக்கப்படும்.



**9. சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம் (Tamil Nadu Centre for Sports Science) ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

விளையாட்டு அறிவியல் என்பது ஒரு வளர்ந்து வரும் துறையாகும். இது விளையாட்டு வீரர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு செயல்திறன்களை மேம்படுத்தவும், விளையாட்டு தொடர்பான காயங்களிலிருந்து மறுவாழ்வு பெறவும், தொழில்நுட்ப முறையில் உடல் தகுதியை மீட்டெடுக்கவும் உதவுகிறது.

தொழில்நுட்பத்தின் பலன்களை நமது வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களுக்கு விரிவுபடுத்தி, திறமைகளை மேம்படுத்தும் வகையில் ஒரு சிறப்பு முயற்சியாக சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம் (Tamil Nadu Centre for Sports Science) ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**10. மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காக பொதுமக்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து 'TN சாம்பியன்ஸ் அறக்கட்டளை' (TN Champions Foundation) அமைக்கப்படும்.**

மாநிலம் முழுவதும் விளையாட்டுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பொதுமக்கள், பெருநிறுவனங்கள் மற்றும் விளையாட்டில் ஆர்வமுள்ள ஆதரவாளர்கள் பங்களிக்க தயாராக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் விளையாட்டுகளை புத்துயிர் பெறச் செய்வதற்கு அவர்களின் பங்களிப்புடன் 'TN சாம்பியன்ஸ் அறக்கட்டளை' அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

'TN சாம்பியன்ஸ் அறக்கட்டளை' அமைப்பதற்கு ரூ.300.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



**11. மாமல்லபுரத்தில் உலக சர்ஃபிங் லீக் (World Surfing League) போட்டிகள் நடத்துவதற்கு ரூ.268.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

உலக அரங்கில் அனைவரும் வியந்து பார்க்கும் வண்ணம் தமிழ்நாடு அரசு பல்வேறு சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதை ஊக்குவிக்கும் வகையில் உலக சர்ஃபிங் லீக் (World Surfing League) போட்டிகள் மாமல்லபுரத்தில் நடத்திட ரூ.268.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 12. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (TNPESU) மகளிர் விடுதிக்கு ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் (TNPESU) பல்வேறு விளையாட்டு மற்றும் உடற்கல்வி தொடர்பான பட்டயப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை நடத்தும் முதன்மை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. இப்பல்கலைக்கழக விடுதியில் தங்கி பயிலும் மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு அங்கு செயல்பட்டு வரும் மகளிர் விடுதிக்கு ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.



## 13. 2023 சென்னை ஸ்குவாஷ் உலக கோப்பை (2023 Chennai Squash World Cup) நடத்துவதற்கு ரூ.150.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

உலக ஸ்குவாஷ் சாம்பியன்களை உருவாக்கியுள்ள சென்னை ஸ்குவாஷ் விளையாட்டின் தலைநகரமாக விளங்குகிறது.

2023 சென்னை ஸ்குவாஷ் உலகக் கோப்பையை நடத்துவதற்கு ரூ.150.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

## 14. திருச்சி ஓலையூரில் தேசிய மாணவர் படை (NCC) நிரந்தர பயிற்சி மையம் அமைக்க முதற்கட்டமாக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

திருச்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு பயிற்சி அளிக்க ஏதுவாக திருச்சி மாவட்டம், ஓலையூரில் தேசிய மாணவர் படைக்கு (NCC) நிரந்தர பயிற்சி மையம் அமைக்க முதற்கட்டமாக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.



## 15. ஈரோடு மாவட்டம், கரட்டுப்பாளையத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக் மையத்தில் விளையாட்டு விடுதி மற்றும் புதிய ஜிம்னாஸ்டிக் அரங்கம் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஈரோடு மாவட்டம், கரட்டுப்பாளையத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக் மையம் பழங்குடியினர் குழந்தைகளின் ஜிம்னாஸ்டிக் திறமையை கண்டறிய பிரத்யேக மையமாக உள்ளது. பழங்குடியினர் குழந்தைகளின் அபாரத் திறமைகளை ஊக்குவிக்கவும், வருங்கால சாம்பியன்களை உருவாக்கவும் கரட்டுப்பாளையத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக் மையத்தில் விளையாட்டு விடுதி மற்றும் புதிய ஜிம்னாஸ்டிக் அரங்கம் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**16. செங்கல்பட்டு மாவட்டம், நீர்பெயரில் அமைந்துள்ள தேசிய மாணவர் படை (NCC) நிரந்தர முகாமில் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.**

செங்கல்பட்டு மாவட்டம், நீர்பெயரில் அமைந்துள்ள தேசிய மாணவர் படையின் (NCC) நிரந்தர முகாமில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி வசதிகளை அளித்திட ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.



**17. தேசிய மாணவர் படையினர் (NCC) பங்கேற்கும் குடியரசு தின அணி வகுப்பு மற்றும் இதர முகாம்களுக்கான நிதி உதவி ரூ.100.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய மாணவர் படையினர் (NCC) குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்று தங்கள் ஒழுக்கம் மற்றும் சிறப்பான செயல்பாடுகளால் நாடு முழுவதும் அறியப்பட்டுள்ளனர்.

தேசிய மாணவர் படையினர் (NCC) பங்கேற்கும் குடியரசுதின அணிவகுப்பு மற்றும் இதர முகாம்களுக்கான நிதி உதவி ரூ.100.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

## 18. நாட்டு நலப்பணித் திட்ட (NSS) அமைப்பின் பல்வேறு சிறப்பு செயல்பாடுகளுக்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

நாட்டு நலப்பணித் திட்ட (NSS) தொண்டர்கள் சமூக சேவைக்கும், அர்ப்பணிப்புக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளனர். தேசிய ஒருங்கிணைப்பு முகாம், இளைஞர் விழாக்கள், சாகச முகாம்கள், திறன் பயிற்சி மற்றும் குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்றல் போன்ற பல சிறப்பு நிகழ்ச்சிகளை நாட்டு நலப்பணித் திட்டம் நடத்தி வருகிறது.

இத்தகைய பல்வேறு சிறப்பு செயல்பாடுகளுக்காக நாட்டு நலப்பணித் திட்ட (NSS) அமைப்பிற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.



## 19. புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களை நிபுணத்துவ பயிற்றுநர்களாக (Expert Coaches) பயன்படுத்த ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

மாநிலம் முழுவதும் உள்ள வளரும் விளையாட்டு வீரர்களுக்கு பலன் அளிக்கும் வகையில் தலைசிறந்த விளையாட்டு வீரர்களை நிபுணத்துவ பயிற்றுநர்களாக ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. நமது விளையாட்டு வீரர்கள் மற்றும் பிற பயிற்றுநர்களுக்கு வழிகாட்டவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்தவும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிபுணத்துவ பயிற்றுநர்களாக புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களை ஈடுபடுத்தும் செயல்முறையைத் தொடங்குவதற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

**20. மதுரை மாவட்டம், இடையப்பட்டியில் உள்ள தேசிய மாணவர் படை (NCC) பயிற்சி அகாடமி உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.**

மதுரை மாவட்டம், இடையப்பட்டியில் உள்ள தேசிய மாணவர் படை (NCC) பயிற்சி அகாடமியின் உட்கட்டமைப்பை மேம்படுத்தி தேசிய மாணவர் படையினருக்கு சிறந்த பயிற்சி வசதிகளை உருவாக்கிட ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.



**21. விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் விதமாக "தந்தை பெரியார் நினைவேந்தல் சொற்பொழிவு" ஆண்டுதோறும் நடத்துவதற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.**

இளைஞர்களின் பகுத்தறிவு சிந்தனையை தூண்ட அயராது பாடுபட்ட தந்தை பெரியார் அவர்களை போற்றும் வகையில், விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் விதமாக "தந்தை பெரியார் நினைவேந்தல் சொற்பொழிவு" ஆண்டுதோறும் நடத்துவதற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

## 22. விளையாட்டு அறிவியல் குறித்த பன்னாட்டு அளவிலான கருத்தரங்கம் நடத்துவதற்கு ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

விளையாட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை விளையாட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சியின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது. மேலும் விளையாட்டு வீரர்களின் அதிக செயல்திறனுக்கான வாய்ப்புகளை வழங்கும் ஒரு வளர்ந்து வரும் துறையாக இது காணப்படுகிறது. இதன் பலன்கள் விளையாட்டு வீரர்களை சென்றடைவதற்கான ஒரு முன்னோடி முயற்சியாக விளையாட்டு அறிவியல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கம் நடத்திட ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.



## 23. புதிய விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள வசதிகளை தரம் உயர்த்துவதன் மூலம் மாநிலத்தில் உள்ள விளையாட்டு உட்கட்டமைப்புகள் மறுசீரமைக்கப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநிலம் முழுவதும் விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பல விளையாட்டு அரங்கங்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்த வசதிகளை புதுப்பித்து அவற்றை நவீனமயமாக்குவதற்கு தொடர்ந்து மேம்படுத்த வேண்டியுள்ளது.

எனவே, மாநிலம் முழுவதும் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் படிப்படியாக புதுப்பிக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

## 24. இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டுகளுக்கான அகாடமி (Tamil Nadu Olympic Water Sports Academy) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் முதல் முறையாக இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒலிம்பிக் நீர் விளையாட்டுகளுக்கான அகாடமி அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒலிம்பிக் நீர் விளையாட்டுகளுக்கான வழக்கமான மற்றும் தீவிர பயிற்சியினை ஊக்குவிக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



## 25. ஆசிய ஹாக்கி ஆடவர் சாம்பியன்ஷிப் 2023 (Asian Hockey Men's Championship 2023) சென்னையில் நடத்துவதற்கு நிதியுதவி வழங்கப்படும்.

ஆசிய கோப்பை ஆண்கள் ஹாக்கி போட்டி கடந்த 2007–ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது.

15 ஆண்டுகளுக்குப் பிறகு சர்வதேச அளவிலான ஆசிய ஆடவர் சாம்பியன்ஷிப் 2023 ஹாக்கி போட்டி சென்னையில் மீண்டும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்த ஆசிய ஹாக்கி ஆடவர் சாம்பியன்ஷிப் 2023 சென்னையில் நடத்துவதற்கு நிதியுதவி வழங்கப்படும்.

## 26. ATP சென்னை ஓபன் டூர் 2023 சென்னையில் நடத்துவதற்கு நிதியுதவி வழங்கப்படும்.

சென்னை நகருக்கும் டென்னிஸ் விளையாட்டிற்கும் வலுவான தொடர்பு உண்டு. சென்னை பல புகழ்பெற்ற சர்வதேச டென்னிஸ் வீரர்களை உருவாக்கியுள்ளது.

டென்னிஸ் விளையாட்டை மேலும் ஊக்குவிக்கவும், நமது இளைஞர்கள் உலகளாவிய டென்னிஸ் போட்டியை கண்டுகளிக்கவும் ATP சென்னை ஓபன் டூர் 2023 சென்னையில் நடத்துவதற்கு நிதியுதவி வழங்கப்படும்.



## 27. பொதுமக்களிடையே உடற்தகுதி கலாச்சாரத்தை புகுத்தும் வண்ணம் அறிஞர் அண்ணா மாரத்தான் ஓட்டம் (Arignar Anna Marathon Run) ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும்.

அன்றாட வாழ்வில் உடற்தகுதியை பேணுவது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதற்கும், உடற்தகுதி கலாச்சாரத்தை இளைஞர்களிடையே புகுத்துவதற்கும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் அறிஞர் அண்ணா மாரத்தான் ஓட்டம் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

**28. "நம்ம ஊரு விளையாட்டுத் திடல்" – ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படும்.**

தனிநபர் வாழ்க்கையில் விளையாட்டு மற்றும் உடற்தகுதி மிகவும் விலைமதிப்பற்றதாகும். எனவே, கிராமப்பகுதி இளைஞர்களிடையே விளையாட்டு மற்றும் உடற்தகுதி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "நம்ம ஊரு விளையாட்டுத் திடல்" திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படும்.



**29. தமிழ்நாட்டில் முதற்கட்டமாக கொளத்தூர், சேப்பாக்கம், வாணியம்பாடி, காங்கேயம், சோழவந்தான், திருவெறும்பூர், ஸ்ரீவைகுண்டம், பத்மநாபபுரம், ஆலங்குடி மற்றும் காரைக்குடி ஆகிய பத்து சட்டமன்றத் தொகுதிகளில் அமையவிருக்கும் சிறு விளையாட்டரங்கங்களுக்கு 'முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்' எனப் பெயரிடப்படும்.**

சட்டமன்றத் தொகுதிகளில் விளையாட்டு வீரர்களின் உடற்தகுதி மற்றும் விளையாட்டு வளர்ச்சியினை தூண்டும் வகையில் சிறு விளையாட்டரங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் முதற்கட்டமாக கொளத்தூர், சேப்பாக்கம், வாணியம்பாடி, காங்கேயம், சோழவந்தான், திருவெறும்பூர், ஸ்ரீவைகுண்டம், பத்மநாபபுரம், ஆலங்குடி மற்றும் காரைக்குடி ஆகிய பத்து சட்டமன்றத் தொகுதிகளில் அமையவிருக்கும் சிறு விளையாட்டரங்கங்களுக்கும் மற்றும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள 29 சிறு விளையாட்டரங்கங்களுக்கும் 'முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்' எனப் பெயரிடப்படும்.

**30. மாநிலத்தின் ஒட்டுமொத்த விளையாட்டு மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கான வழிகாட்டியாக "தமிழ்நாடு விளையாட்டுக் கொள்கை" கொண்டு வரப்படும்.**

விளையாட்டு செயல்பாடுகளை ஊக்குவித்து விளையாட்டு மேம்பாட்டிற்கான திட்டங்களை உருவாக்கி விளையாட்டுகளின் தரத்தை மேம்படுத்த 2000–ஆம் ஆண்டில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களால் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை உருவாக்கப்பட்டது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த விளையாட்டு மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கான வழிகாட்டியாக செயல்பட விரிவான மற்றும் முழுமையான "தமிழ்நாடு விளையாட்டுக் கொள்கை" கொண்டு வரப்படும்.



**31. சென்னையில் உலக தரத்தில் இந்தியாவின் முதல் 6 ட்ராப் ரேஞ்ச் (6 Trap Range) அடங்கிய ட்ராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கி சுடுதலுக்கான (Trap and Skeet Shooting) சிறப்பு அகாடமி அமைக்கப்படும்.**

சென்னையில் உலக தரத்தில் இந்தியாவின் முதல் 6 ட்ராப் ரேஞ்ச் (6 Trap Range) அடங்கிய ட்ராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கி சுடுதலுக்கான (Trap and Skeet Shooting) சிறப்பு அகாடமி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.